


யாழ்ப்பாணம் மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும்
கோண்டாவில் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட

அமரர்

# திரு. செல்லத்துரை கந்தசாமி

அவர்களின் 31ம் நாள்

# நினைவுமலர்

**04.02.2015**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்



யாழ்ப்பாணம் மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும்
கோண்டாவில் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட

# அமரர்

# செல்லத்துரை கந்தசாமி

அவர்களின்

சிவபதப்பேறு குறித்த 31ம் நாள்

# நினைவு மலர்

## 04-02-2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்


அன்பும் பண்புமாய்
ஆதரித்து எமை வளர்த்து
மாண்புடனே இப்புவியதனில்
மேன்மையுடன் நாம் வாழ
இன்சொல், இனிய சுபாவம்
எளிதாகக் கொண்ட
செல்லத்துரை - கந்தசாமி
சிறப்புற நாமம் பூண்ட - எம்
அன்புத் தந்தைக்கு
இம்மலரினைச் சமர்ப்பிக்கின்றோம்.
நன்றி!

**இங்ஙனம்**
**பிள்ளைகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



அமரர்

# திரு.செல்லத்துரை கந்தசாமி

ஜனனம்
01.08.1930

மரணம்
05.01.2015

## திதி வெண்பா

ஆண்டு ஜய மதில் மார்கழித் திங்களிலே
பூண்ட திதி பிரதமையில் பார்புகழும்
நற் கந்தசாமி கந்தன் தாள் சேர்ந்தார்
நாவாளரப் போற்றிடுவோம் என்றும் இனிதே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்ச புராணம்

## விநாயகர் வணக்கம்

திருச்சிற்றம்பலம்

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் - தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

## தேவாரம்

வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன்
மிக நல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேலணிந்தென்
உளமே புகுந்த தனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனி பாம்பிரண்டு முடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே.

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் றனக்குச்
செம்மையே யாய சிவபதமளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவதினியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

பாலும் அமுதமும் தேனுமாய்
ஆனந்தம் தந்துள்ளே பாலிப்பான்
போலும் என் ஆருயிர்ப் போகமாம்
புரகால காமபுராந்தகன்
சேலும் கயலும் திளைக்கு நீர்த்
திருவாவடுதுறை வேந்தனோடு
ஆலும் அஃதற்கே முதலுமாம்
அறிந்தோம் அறிவைப் பொய்யாயதே.

## திருப்பல்லாண்டு

ஆரார் வந்தார் அமரர்
குழாத்தில் அணியுடை ஆதிரை நாள்
நாரா யணனொடு நான்முகன்
அங்கி இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர்
குழாங்கள் திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும்
ஆடியும் பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

ஐந்துபேர் அறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆக குணமொரு மூன்றும்
திருந்துசாத்து வீகமே ஆக
இந்து வாழ் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபேர் இன்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புகழ்

இறவாமல் பிறவாமல்
எனையாள் சற்குருவாகிப்
பிறவாகித் திரமான
பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே
குகனே சொற் குமரேசா
கறையானைக் கிளையோனே
கதிர்காமப் பெருமாளே.

# வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்

X



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விநாயகப் பெருமானால்
## காசியர் முதலிய முனிவர்களுக்கு அருளிய
# காரிய சித்தி மாலை

பந்தம் அகற்றும் அநந்த குணப்
பரப்பும் எவன்பால் உதிக்குமோ
எந்த உலகும் எவனிடத்தில்
ஈண்டி இருந்து கரக்குமோ
சந்த மறை ஆகமங் கலைகள்
அனைத்தும் எவன்பால் தகவருமோ
அந்த இறையாம் கணபதியை
அன்பு கூரத் தொழுகின்றோம்.

உலகம் முழுதும் நீக்கமற
ஒன்றாய் நிற்கும் பொருளெவனவ்
வுலகிற் பிறக்கும் விகாரங்கள்
உறாத மேலாம் ஒளி யாவான்?
உலகம் புரியும் வினைப்பயனை
ஊட்டும் களைகண் எவன் அந்த
உலக முதலாம் கணபதியை
உவந்து சரணம் அடைகின்றோம்.

இடர்கள் முழுவதும் எவனருளால்
எரிவீ ழும்பஞ் செனமாயும்
தொடரும் உயிர்கள் எவனருளால்
சுரர்வாழ் பதியும் உறச்செய்யும்
கடவுள் முதலோர்க் கூறின்றிக்
கருமம் எவனால் முடிவுறும் அத்
தடவு மருப்புக் கணபதிபொன்
சரணம் சரணம் அடைகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூர்த்தி யாகித் தலமாகி
முந்நீர் கங்கை முதலான
தீர்த்தமாகி அறிந்தறியாத்
திறத்தினானும் உயிர்க்கு நலம்
ஆர்த்தி நாளும் அறியாமை
அகற்றி அறிவிப் பான்எவன்அப்
போர்த்த கருணைக் கணபதியைப்
புகழ்ந்து சரணம் அடைகின்றோம்.

செய்யும் வினையின் முதல் யாவன்
செய்யப் படும்அப் பொருள் யாவன்
ஐயம் இன்றி உளதாகும்
அந்தக் கருமப் பயன் யாவன்
உய்யும் வினையின் பயன் விளைவில்
ஊட்டி விடுப்பான் எவன் அந்தப்
பொய்யில் இறையைக் கணபதியைப்
புரிந்து சரணம் அடைகின்றோம்.

வேதம் அளந்தும் அறிவரிய
விகிர்தன் யாவன் விழுத்தகைய
வேதமுடிவில் நடம்நவிலும்
விமலன் யாவன் விறங்குவர
நாத முடிவில் வீற்றிருக்கும்
நாதன் எவன்எண் குணன் எவன்அப்
போத முதலைக் கணபதியைப்
புகழ்ந்து சரணம் அடைகின்றோம்.

மண்ணின் ஓர்ஐங் குணமாகி
வதிவான் எவன்நீர் இடை நான்காய்
நண்ணி அமர்வான் எவன் தீயின்
மூன்றாய் நவில்வான் எவன் வளியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணும் இரண்டு குணமாகி
இயைவான் எவன் வான் இடைஒன்றாம்
அண்ணல் எவன்அக் கணபதியை
அன்பிற் சரணம் அடைகின்றோம்.

பாச அறிவில் பசுஅறிவில்
பற்றற் கரிய பரன்யாவன்?
பாச அறிவில் பசு அறிவும்
பயிலப் பணிக்கும் அவன் யாவன்?
பாச அறிவும் பசு அறிவும்
பாற்றி மேலாம் அறிவான
தேசன் எவன்அக் கணபதியைத்
திகழச் சரணம் அடைகின்றோம்.

இந்த நமது தோத்திரத்தை
யாவன் மூன்று தினமும்மைச்
சந்தி களில்தோத் திரம் செயினும்
சகல கரும சித்திபெறும்
சிந்தை மகிழச் சுகம் பெறும் எண்
தினம் உச் சரிக்கின் சதுர்த்தியிடைப்
பந்தம் அகல ஓர் எண்கால்
படிக்கில் அட்ட சித்தியுறும்.

திங்கள் இரண்டு தினம்தோறும்
திகழ்ஒருபான் முறையோதில்
தங்கும் அரச வசியமாம்
தயங்க இருபத் தொருமுறையை
பொங்கும் உழுவ லால்கிளப்பின்
பொருவின் மைந்தர் விழுக்கல்வி
துங்க வெறுக்கை முதற்பலவும்
தோன்றும் எனச்செப் பினர் மறைந்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் திரு. செல்லத்துரை கந்தசாமி
## அவர்களின்
# வாழ்க்கைக் குறிப்பு

ஈழமணித் திருநாட்டின் வடபகுதியாம் யாழ்ப்பாணப் பதியிலே வரலாற்றுப் புகழ்மிக்க மாவிட்டபுரக் கந்தசுவாமி கோயில் அமைந்திருக்கும் வலிவடக்கில் அமைந்த ஊராம் மாவிட்டபுரத்தில் வாழ்ந்து வந்த செல்லத்துரை – சின்னாச்சிப்பிள்ளை தம்பதிகளின் அருமை மைந்தனாக 1930ம் ஆண்டு ஆவணி மாதம் முதலாம் நாளில் கந்தசாமி அவர்கள் இப்பூவுலகில் அவதரித்தார். தாய் தந்தையரால் மிகுந்த பாசத்துடன் வளர்க்கப்பட்ட இவர் மாவைக் கந்தனையே தனது குலதெய்வமாக வணங்கி வந்தார்.இவர் தனது கல்வியை காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியில் ஆங்கிலமொழி மூலம் கற்றுத் தேறினார். ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்ற இவருக்கு அரச பதவி தொலைவில் கிடைக்கவே, தமது அருமைப் புதல்வனைப் பிரிய மறுத்த தந்தையார், அதனை நிறுத்தி, தனது கமத்தொழிலையே செய்வதற்கு உதவினார். தந்தையின் சொல்லைத் தட்டாத அவரும் கமத்தொழிலினை ஏற்றார்.

இவ்வாறு வாழ்ந்துவரும் நாளில் யாழ்ப்பாணத்திலே "கோடி கொடுத்தாலும் கோணாத வில்" எனப் பெயர் பெற்ற ஊராம் கோண்டாவில் பதியில் வாழ்ந்த சுவாமிநாதர் – பொன்னம்மா தம்பதிகளின் இளைய புதல்வியாம் புவனேஸ்வரியை தமது மருமகளாகத் தேர்ந்தெடுத்து திருமணம் செய்து வைத்தனர். இருவரினதும் இல்லறமாம் நல்லறத்தின் பேறாக கௌரிமலர், இராஜமனோகரன், மதனமோகன், மனோகரி, ஜீத்தா, புஸ்பா ஆகிய பிள்ளைச் செல்வங்களையும் இனிதே பெற்று வாழ்ந்தார். பிள்ளைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நற்பண்பு உள்ளவர்களாகவும், நல்லறிவு பெற்றவர்களாகவும் வளர்த்து வந்தார்.

மணப்பருவம்எய்தும் வேளை மூத்த மகள் கௌரிமலரை இணுவில் மேற்கைச் சேர்ந்த கணதிப்பிள்ளை – நித்தியாந்தனுக்கும், தனது மூத்தமகன் இராஜமனோகரனை இணுவில் மேற்கைச் சேர்ந்த தம்பிஐயா – கமலாசனிக்கும் தனது இளைய மகன் மதனமோகனை இணுவில் மேற்கைச் சேர்ந்த ஞானேஸ்வரன் பத்மரஞ்சினிக்கும் மகள் மனோகரியை திருநெல்வேலியைச் சேர்ந்த பிரான்சிஸ் சேவியர் ஸ்ரீரஞ்சனுக்கும், மகள் ஜீத்தாவை இணுவில் கிழக்கைச் சேர்ந்த லோகநாதன் – லோகேந்திரனுக்கும், இளைய மகள் புஸ்பாவை கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த சுப்பிரமணியம் சதீஸ்குமாருக்கும் திருமணம் செய்து வைத்து அதன் பேறாகச் செந்தூரன், சிந்துஜன், பிரணவி, சுகசிந்தவி, ஜனகன், மதுவந்தி, பதஞ்சலிமீனாம்பாள், பவணந்திமீனாம்பாள், பிரம்மாத்மன், பிரித்திகா, சாத்விகன், லம்போதரன், திலக்ஷனா, மதுசன்ஆகிய பேரப்பிள்ளைகளையும் கண்டு மகிழ்ந்தார். அவர்களுடன் அன்பாகவும், மிகுந்த பாசத்துடனும் பழகி வந்தார்.

பெற்றோருக்கு நல்ல பிள்ளையாகவும் மனைவிக்கு சிறந்த கணவனாகவும், பிள்ளைகளுக்கு நல்ல தந்தையாகவும், பேரப்பிள்ளைகளுக்கு பாசமுள்ள தாத்தாவாகவும் வாழ்ந்து வந்தார். எல்லோருடனும் அன்பாகவும் விருந்தோம்பும் பண்பு கொண்டவராகவும் தன் கடமைகளில் கண்ணுங் கருத்துவமாகவும் வாழ்ந்த இவர் நாட்டின் சூழ்நிலை காரணமாக வலிவடக்கு மக்கள் இடப்பெயர்வு இடம்பெற்றவேளை தனது துணைவியாரின் ஊரான கோண்டாவிலுள்ள இல்லிடத்தில் வந்திருந்து மிகுதி வாழ்வைத் தொடர்ந்தார். அவ்வேளையிலும் தனது பெற்றோர், மனைவி, பிள்ளைகளைக் குறைவின்றி காத்து வந்தார். ஆனாலும் நோயின் தாக்கம் காரணமாக தனது பெற்றோரையும் துணைவியாரையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழந்தார். அந்த நிலையிலும் மனம் சோராது தனது பிள்ளைகளைக் காத்து வளர்த்து, செழிப்புற வைத்தார். அவர்களின் குடும்ப வாழ்வின் செழிப்புக்களைக் கண்டு மகிழ்ந்து வாழ்ந்த இவர், தனது இறுதிக் காலத்தினைத் தனது மூத்தமகனுடன் கழித்தார்.

தனது எண்பத்து நான்காவது அகவையில் மார்கழித் திருவாதிரை நாளில் 05–01–2015 திங்கட்கிழமை அமைதியாய் இவ்வுலக வாழ்வை நீத்து ஆண்டவன் அடியில் சேர்ந்தார்.

*ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூத்தமகள் துயரம்

அன்பு அப்பாவே! மூத்த பிள்ளை என என்னைப் போற்றி வளர்த்தீர்கள். எனது கல்வி முதற்கொண்டு திருமணம் வரையும் நீங்கள் ஒரு தந்தையாகப் பாடுபட்டீர்கள். எங்களுக்காக நீங்கள் பாடுபட்டு உழைத்த நாட்களை எங்களால் மறக்கமுடியாதப்பா.

எங்களுடைய எதிர்காலம் சிறப்பாக அமையவேண்டுமென நீங்கள் எப்போதும் கடவுளை வேண்டினீர்கள். அம்மா நோயுற்று இறந்தபின் அம்மாவின் அன்பையும் சேர்த்து எம்மீது சொரிந்தீர்கள் அப்பா.

உங்களைப் பார்க்க வருவதற்கு நாம் ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கையில் நீங்கள் எங்களை விட்டுப்பிரிந்த செய்தி கேட்டு கதறினோம். இனி எமக்கு உங்களைப்போல் யாருண்டு? உங்களை கணினியில் பார்த்து கதைக்கும்போதுகூட நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்துவிடுவீர்கள் என நாங்கள் நினைக்கவில்லை.


உங்கள் பிரிவுத்துயர் வாட்டுகிறபோதும் உங்கள் ஆத்மா ஆண்டவன் திருடிவகளில் அமைதியுறவேண்டும் என வேண்டுகிறேன் அப்பா.

*ஓம் சாந்தி!*

**மூத்தமகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மனைவியுடன்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூத்த மருமகன் துயரம்

அன்பு மாமாவே, உங்கள் பிரிவைத் தாங்கமுடியாது தவிக்கின்றேன். பெற்ற பிள்ளைகளிடம் காட்டிய அதே அன்பை என்னிடமும் காட்டி வந்தீர்கள். உங்களின் மூத்த மகனாக என்னை நேசித்தீர்கள் மாமா. எப்போது தொலைபேசியில் பேசும்போதும் என் குரலையும் கேட்டால்தான் உங்களுக்கு மகிழ்ச்சி. "தம்பி" என அழைக்கும் உங்களின் குரலை இனி கேட்கமுடியாதே என நினைக்கையில் தாங்கமுடியவில்லை மாமா.

இம்முறை மனைவி, பிள்ளைகளுடன் வந்து உங்களை மகிழ்விக்க நினைத்திருந்த வேளை உங்கள் பிரிவுச்செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்தேன். நோயில் இருந்தாலும் இவ்வளவு விரைவில் எங்களை விட்டுப் பிரிந்துவிடுவீர்கள் என எண்ணவில்லை மாமா. விதியின் செயல் எம்மை வருத்துகிறது மாமா. உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

*ஓம் சாந்தி!*

மூத்தமருமகன்

**நித்தியானந்தன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூத்த பேரப்பிள்ளைகளின் துயரம்

எங்களின் அன்பு அம்மப்பாவே! பிறந்திருக்கும் புத்தாண்டில் உங்களை வந்து பார்த்து மகிழ்ச்சியடைய நினைத்திருந்தோம். அதற்குள் நீங்கள் எங்களை விட்டுப்பிரிந்துவிட்ட செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்தோம்.

அம்மப்பா போன தடவை உங்களைப் பார்க்க வந்தபோது நீங்கள் எங்களில் காட்டிய அன்பை மறக்கமுடியாது. உங்களின் மூத்த பேரப்பிள்ளைகள் நாங்கள் என்று கூறி சந்தோசப்பட்டீர்கள் அம்மப்பா.

உங்களின் சிரிப்பும் மகிழ்ச்சியும் எங்களால் ஒதுபோதும் மறக்கமுடியாதது. நீங்கள் வாங்கித்தந்த பொருட்களும் எங்களை மகிழ்ச்சிப்படுத்த கதைத்த கதைகளையும் நாங்கள் மறக்கமுடியாது. அம்மம்மா இறந்தபிறகு அவவின் பாசத்தையும் சேர்த்து எங்கள் மீது பொழிந்தீர்கள். இங்கிருந்து உங்களை கணினியில் நேரே பார்த்து கதைக்கும்போதும் எங்களின் சுகத்தையும், எங்களின் முன்னேற்றங்களையும் கேட்பீர்கள்.

அம்மப்பா காலம் உங்களை எங்களிடம் இருந்து பிரித்துவிட்டது. உங்கள் பிரிவில் நாங்கள் துடித்து நிற்கின்றோம், தவித்து நிற்கின்றோம். உங்களின் ஆத்மா இளைப்பாறி இன்புற்றிருக்க இறைவனை வேண்டுகிறோம்.

*ஓம் சாந்தி!*

மூத்த பேரப்பிள்ளைகள்
**செந்தூரன், சிந்துஜன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெஞ்சை விட்டு அகலாத நினைவுகள்

இரண்டாயிரத்து ஒன்றில்
இணைந்த மணவாழ்வில்
மாமாவை கண்டேன் – அவர்
முயற்சிகளைப் பார்த்திருந்தேன்
சுறுசுறுப்பாய் திரிவார் – என்றும்
சும்மா இருக்கமாட்டார்.
பொழுது புலரும் முன் எழும்பி
புனிதமாக்கக் கூட்டிடுவார்.
கடவுளுக்குச் சாத்தவென
காலையில் மலர்கொய்வார்.
விறகும் கூட எடுத்து வைப்பார்.
வீண் நேரம் போக்கமாட்டார்.
நம்பிள்ளைகளைப் பாட்டுப்பாடி
நித்திரையும் கொள்ளவைப்பார்.
வேலைக்குச் செல்லும் நேரம்
வாசல் வரை வந்து
வழியனுப்பி வைத்துவிட்டு
வீட்டையும் காத்திடுவார்.
நேரம் பார்த்து தம் கடமை
நேர்த்தியாகச் செய்திடுவார்.
சொல்லாமலே இத்தனையும்
சோர்ந்திடாமல் செய்திடுவார்.
மூத்தமகள் அவர் மடியில்தான்
மழலையில் பாடம் கற்றிட்டாள்
தாத்தா சொல்லுங்கோ – என
தட்டித்தட்டி கேட்டிடுவாள்.
கேட்பது எதுவாயினும்
கூசாமல் பதிலளிப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்கல் பூசை என்றால்
பூரிப்பார் நம்மாமா
வாழையிலை அறுகம்புல்
விருப்பத்துடன் தேடி வைப்பார்
வீடு வரும் மனிதரிடம்
விருப்புடனே பழகிடுவார்
பிரியமாய் நம் பிள்ளைகளை
பள்ளி செல்லும் வேளை
படலை வரை வந்து
பாங்குடனே அனுப்பி வைப்பார்
பள்ளி விடும் நேரம் பார்த்து
பார்த்திருப்பார் வாசலிலே
சொல்லித் தடுத்தாலும்
சும்மா இருக்கமாட்டார்
ஆங்கிலம் கற்பிப்பதில்
அவருக்கு கொள்ளை ஆசை
பிள்ளைகள் ஏதும் கேட்டால்
பிரியமாய்ப் பதிலளிப்பார்
"கிரிக்கெட்" பார்ப்பதுவும்
குட்டி ஆசை அவருக்கு
மகனுக்கு நற் தந்தையாய்
மருமகளின் நல் மாமனாய்
பிள்ளைகளின் நற்பேரனாய்
பிரியமாய் வாழ்ந்த அவர்
இறுதி ஒரு வருடம்
இயலாமை ஆட்கொள்ள
அவரின் சுறுசுறுப்பும்
அணுஅணுவாய் குறைந்தது
ஆனாலும்அவர் நிதானம்
எப்பவும் குறைந்ததில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதி இரு வாரங்கள்
அமைதியாய் ஓய்வெடுத்தார்
வாயில் உணவின்றி
வாய்மூடிக் கிடந்திட்டார்
ஆடி அசைந்த ஜீவன்
என்றும் பேசித் திரிந்த ஜீவன்
பேசாமல் இருந்திடவே
பார்த்திருக்க முடியவில்லை
காலனவன் கணக்கினை
கச்சிதமாய் முடித்தார் போலும்
மனம் குளிர்ந்த நன்நாளாம்
மார்கழித் திருவாதிரையில்
அமைதியாய் அவர்ஆத்மா
ஆண்டவனைத் தேடியது
"ஆயிரம் உறவுகள்
எம்மைத் தேடி வந்தாலும்
அருகிருந்து எமைக் காத்த
அந்த ஜீவனுக்கு நிகரில்லை"

வையத்துள் வாழ்வாங்கு
வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும் – என்ற
திருவள்ளுவர் வாக்குப்படி
அவர் ஆத்மா சாந்திக்காய்
ஆண்டவனைப் பிரார்த்திப்போம்

*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*

**மூத்த மகன் இராஜமனோகரன் குடும்பம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீங்காத நினைவுகளுடன்....

எமக்கு உயிர் தந்த தெய்வங்கள்
எம் அம்மாவும் அப்பாவும்
அம்மாவின் இழப்பின் பின்னும்
வலி சுமந்து எமக்கெல்லாம் ஒரு
காவலனாக எம் அறுவரையும்
இணைத்து வழிநடத்தும்
ஓர் உறவுப் பாலமாக இருந்தீர்கள்
உங்கள் இறுதிக் காலத்தில் என்ன வேண்டும்
அப்பா என்று கேட்கும்
போதெல்லாம் எனக்கு ஒன்றும் வேண்டாம்
"என்னை வந்து பார்த்தால் போதும்" என்ற
அந்த வார்த்தை என்னை மிகவும் நெகிழ வைத்தது.
உங்கள் இறுதிக் கிரியைகளில்
கலந்து கொள்ளமுடியவில்லை என்ற
மனவேதனையிலும் உங்களுடன்
களித்த அந்த இறுதி மூன்று வாரங்களையும்
நினைத்து என்னை நானே
தேற்றுகிறேன். உடலினால் நீங்கள்
மறைந்தாலும் "தம்பி" என்றும், மருமகளானாலும்
"பிள்ளை, தங்கச்சி" என்றும் நீங்கள் அன்பாக
அழைத்து உறவாடும் உங்கள் இனிய குரல்
எம் காதுகளிலும், மனங்களிலும் நீங்கா
நினைவுகளாக என்றும் ஒலிக்கும்.

இளையமகன், மருமகள்
**மதனமோகன், பத்மரஞ்சனி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் அப்பப்பா

அப்பப்பா எங்களுடன் சந்தோசமாக கணினியில் கதைப்பார். பூனைக்குட்டியைக் காட்டி எங்களை மகிழ்விப்பார். நாங்கள் என்றும் அப்பப்பாவை மறக்கமாட்டோம்.

பேரப்பிள்ளைகள்

**ஜனகன், மதுவந்தி**

## எங்கள் அன்புத் தாத்தாவே!

எப்ப வருவீர்கள், எப்ப வருவீர்கள் என்று கேட்பீர்கள். நாங்களும் பாடசாலை விடுமுறைக்கு வருவோம் என்று கூறுவோம். காத்திருந்து காத்திருந்து பாடசாலை விடுமுறைக்கு உங்களிடம் வந்தோம். எங்களையும் கட்டியணைத்து அன்பு முத்தம் தந்து அரவணைத்தீர்கள். பூனைக்குட்டிகளைக் காட்டித்தந்து எங்களுடன் ஒரு வாரமாய் விளையாடினீர்கள். அன்பு முத்தமிட்டு திருநீறு பூசி ஆசீர்வதித்து எங்களை சுவிஸ்•க்கு அனுப்பி வைத்தீர்கள். மீண்டும் எங்களை என்னிடம் இன்னும் இரண்டு பூனைக்குட்டி இருக்கிறது எப்ப வந்து பார்ப்பீர்கள் என்று கேட்டீர்கள். நாங்களும் மீண்டும் வருவோம் தாத்தா. நாங்கள் வரும்போது எங்கள் அன்புத்தாத்தா எங்களுடன் இல்லையே. ஆனால் பூனைக்குட்டிகளும் உங்கள் நினைவுகள் மட்டும் எங்களுடன் இருக்கும்

என்றும் உங்கள் நினைவுகளுடன் பேரப்பிள்ளைகள்.

**பிருத்திக்கா, சாத்விகன், லம்போதரன்**

## அப்பா!

கருவிற்கு உயிர் தந்து அன்புடன் எமை வளர்த்து பெருமதிப்பாய் நாம் வாழ வாழ்த்துக்கள் தந்து நல்வழி காட்டி புத்திமதி பல கூறி வாழவைத்த எங்கள் அன்புத் தெய்வமே எங்கள் அப்பா உங்கள் நினைவுகளுடன் வாழும்.....

**லோகேந்திரன் குடும்பம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னமகள் மனோகரி

அப்பா!

ஊரறியப் பேரறியப் மாவிட்டபுரத்தில் பெருமையாய்வாழ்ந்தீர்கள் அப்பா
ஆறு பிள்ளைகளைப் பெற்றுபன்னிருகரங்களும் துணை இருக்க
ஆனந்தமாய் பெருவாழ்வுவாழ்ந்தீர்கள் அப்பா.

பள்ளிநாட்களில் யூனியன் கல்லூரிவாசலிலே
காத்துநின்று கூட்டிவருவீர்கள் அப்பா! – மாலையிலே
மகிழ்வாய் ஆச்சியுடன் தோட்டத்திற்குபோய் வருவோமே!
வடக்குவீதியில் சுவாமிஉலாவரும் காட்சிதனைபார்த்து
இன்பமாய் ஒன்று கூடியேவாழவைத்தீர்கள் அப்பா!

அப்பா! செல்லப்பிள்ளையாய் எப்போதும் நீங்கள் இருக்க –
பாலொடு தயிரும் பலகனிகளும், காய்கறிகளும் அடுக்கிவைப்பார் அப்பு.
தும்பிக்கையான் துணையிருப்பான் – தூயவிரதம் அம்மா இருக்க
நம்பிக்கையுடன்எமைவளர்த்தீர்கள் அப்பா!

ஊரிழந்துவீடு இழந்துதாய் வீடுவந்தவேளை
ஏங்கித்தவித்துஎம் அம்மாவையும் நாம் இழந்தோம்.
அக்காவே எமக்கெல்லாம் தாயாக, அத்தானின் பேருதவியுடன்
மீண்டும் எம் வாழ்வு வளம் பெற வைத்தீர்கள் அப்பா!

அரும்பாடுபட்டுஅண்ணாவும் சின்னண்ணாவும் பெருவாழ்வுநாம்
வாழதுணையாய் இருந்தீர்கள் அப்பா!
என் பணியைநான் செய்யஎன்நேரமும் ஆறுதலாய் – வீட்டில்
எமக்கு இருந்தீர்கள் அப்பா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளிவிட்டதும் துள்ளிவரும் ஜீவாவும், புஸ்பாவும்"சின்னக்கா" என்றுசெல்லமாய் அழைக்க"உங்கைதான் பிள்ளை"என்பீர்கள் அப்பா!

அப்பா! தனிப்பிள்ளையாய் நீங்கள் இருந்தாலும் எப்போதும் சுற்றமும் சூழ பெரியம்மா,சின்னம்மா,மாமா,மாமி,பிள்ளைகள், மருமக்கள்,பேரப்பிள்ளைகள் எனஉறவுகள் நடுவேமகிழ்ந்திருந்தீர்கள் அப்பா!

மாமாவின் வழிகாட்டலில் எங்களுக்கெல்லாம் நல்ல திருமணமும் செய்துவைத்தீர்கள் அப்பா!
அத்தான்,அக்காபிள்ளைகளோடுவந்து – உங்கள்
பிறந்தநாளைசிறப்பாககொண்டாடி
மகிழ்ந்தோமே அப்பா.

அண்ணாவொடுஅண்ணியும் தானும் ஒருபிள்ளையாய் இறுதிவரைஉங்களைஅன்போடுபேணிகாத்தார்கள் அப்பா.
சின்னண்ணாசின்னண்ணியும் பரிவுடனேபார்த்துசெல்லஇகந்த சஷ்டி விரதம் தனைசின்னண்ணாஉங்கள் அடியிலேபிடிக்கவந்தார் அப்பா.

பாசத்துடன் இந்துவும் ஜீவாவும் உங்களைப் பார்க்கவந்து உங்கள் அடியிலேமகிழ்ந்து இருந்தார்கள் அப்பா!
பக்கத்தில் இருந்தேசதீசும் புஸ்பாவும் எந்நாளும் பார்த்துச் சென்றார்கள்.
ஆனாலும் அவள் அழுதாள் ஓயாமல் ஆறவில்லை எம்மனது அப்பா.

எட்ட இருந்துஏங்கித்தவித்தேன் கிட்டவந்தேன்
உங்கள் அடியில்– உயிர் பிரியும் வேளையில் பக்கத்தில் இருந்தேன்
"கணப்பொழுதேயாயினும் தவப்பொழுதே" –இது எனக்குபோதும் அப்பா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பா! அம்மாவும் நீங்களும் என்நாளும் எங்களுக்குதுணையாக இருப்பீர்கள்.
உங்கள் ஆத்மாசாந்திபெற இறைவனைவேண்டுகின்றோம் அப்பா!

மகள் – மனோகரி

**மாமா!**

அதிகம் பேசாதுஅமைதியாய் இருப்பார்அன்பாய்பேசுவார்.
தன்பிள்ளையைப் போன்றேமருமக்களைஎண்ணுகின்றபெருமனிதர்.
"தம்பிஎப்போவந்தீங்கள்" என்றேகண்டதும் கேட்பார் மாமா
உங்கள்ஆத்மாசாந்திபெறநல்லைக்கந்தனைவேண்டுகிறோம்.

மருமகன் – ஸ்ரீறஞ்சன்

**அம்மப்பா!**

உங்களோடுபழகியதுசிலகாலம் தான் என்றாலும்
அன்போடு அம்மா உங்களை நினைவு கூறியது
எந்நாளுமேஅம்மப்பா!
"நல்லபிள்ளையாய் இருக்கவேண்டும்,நல்லாப்
படிக்கவேண்டும்,அம்மாபாவம்"
என்றுசொல்வீர்கள்– இன்றும் என் காதில் கேட்கிறதுஅம்மப்பா!
உங்கள் ஆத்மாசாந்திக்காகசிவசக்திதனைவேண்டுகிறோம் –
பேரப்பிள்ளைகள்.

பேரப்பிள்ளைகள்–பதஞ்சலி, பவணந்தி, பிரம்மாத்மன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மறந்திடுமா உங்கள் முகம்?

குடும்பமெனும் சோலையிலே
கடைசி மகள் என்றுஎனைப்
பாசமுடன் வாழவைத்த
பிரியமான என் அப்பாவே.......
சிறப்பாகப் படி என்று எனைச்
செல்லமாய் வளர்த்தீர்களே
அறிவுரை கூறி அரவணைத்த
அன்புக்குரல் எங்குதான் சென்றதோ
அன்புடன் பார்க்க வந்தேன்
அமைதியாய் உறங்கினீர்கள்
பார்த்திருக்க சடுதியாய்
பரமனிடம் சென்றீர்களே...

சொல்லிலே மதிப்புடன் எனைச்
செல்லமாய் "தம்பி" என்பீர்களே
பெயர் சொல்லி அழைக்காமல்
பெருமையுடன் வாழ்ந்தீர்களே – மாமா
இனி உங்களை எங்கு காண்போம்
எம் விழிநீர் சொரிய தவித்திருக்கிறோம்
மறந்திடுமா உங்கள் முகம் – இல்லை
மறைந்திடுமா உங்கள் நினைவுகள்

எம் இதயத்தில் குடி கொண்ட
என்றும் அன்பான தாத்தாவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் அழுகை கேட்கலையோ
எம்மை எல்லாம் விட்டுச்செல்ல
எப்படித்தான் நினைத்தீர்கள்
இப்பாரினிலே உங்கள் முகத்தை
இனி எங்கே காண்போமோ.....
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கடைசி மகள் **புஸ்பா**
**சதீஸ்குமார்,**
**திலக்ஷனா, மதுசன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் நெஞ்சிருக்கும்வரை நினைத்திருப்போம்

மண்ணில் நல்லவண்ணம் வாழ்ந்தவரே
விண்ணில் நிலைபெற்ற எமதருமை அத்தானே
கண்ணில் நிழலாடும் எங்கள் அண்ணாவே
தண்ணளிசேர் எமதருமை தங்கநிகர்மாமாவே
புண்ணியனே புகழுடம்பு பெற்றாய் நீயென்றே
எண்ணியே இறைகழலிற் சாந்திபெறப் பிரார்த்தித்தோம்.

ஆலமரமென நிழல்கொடுத்த தலைவன் நீயே
காலன் வசப்பட்ட கொடுமையை என்றுரைப்போம்
சீலமும் கூர்ந்த மெய்ஞ்ஞானமும் உடையானே
ஆலமுண்ட கண்டத்தான் அடிசேர்ந்தா யென்றே
காலமெலாம் உம்நினைவாய் வாழாமல் வாழ்கின்றோம்
சாலவே எம்நெஞ்சிருக்கும் வரையுமை நினைத்திருப்போம்

**துயரால் வாழும்**
**மைத்துனன், தங்கை**
**மருமக்கள்**

கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாசம் மிகுந்த உறவை இழந்தோம்

அக்காவின் அத்தான் கந்தசாமி
மறைவு என்
மிக்க துயரமெலாங் கூறத்
திறனில்லேன்
சொல்லி அழுதாலும் சோகக்
கடலின் துயர் தீராது
சாய்ந்து படுத்திருந்த சாய்மனையும்
சோகத்தால் சோபையிழந்தது
சாய்மனையும் வெறிச்சோடிக் கிடக்கிறதே.

"தங்கச்சி தவமணி" என்றழைக்கும்
பாசம் மிகுந்த வாசகம்
என் நெஞ்சில் இன்னமும்
ஒலித்துக் கொண்டே இருக்கிறது
நல்ல மனிதரையும் நாமிழந்தோம்
பாசம்மிகுந்த உறவையும் இழந்தோம்
கல்லாக்கி மனதைக் கசிந்துருகி
கடவுளை வேண்டி
நல்லாசி பெற்று ஆத்மா
சாந்திக்காக வணங்குகிறோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

**கனகசபாபதி தவமணி**
**(மைத்துனி)**
**குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கற் செய்தி

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

என்ற திருவள்ளுவரின் குறளுக்கேற்ப வாழ்ந்தவர் எங்கள் சித்தப்பா. அவர் தன் மேன்மையான அன்பின் மூலம் எங்கள் குடும்பத்து இதயங்களை வென்றவர். எங்கள் குடும்பத்தில் சித்தப்பா நிலையான அன்பையும் பெற்றிருந்தார். அவரைப்பற்றி அடுக்கிக்கொண்டே போகலாம். கடந்த கால நினைவுகளை நினைவுகூர எங்கள் மனம் மிகவும் வேதனையில் அலை பாய்கிறது. அவரின் ஆத்மா சாந்திடைய எனது குடும்பத்தின் சார்பிலும் எனது சகோதரர்கள், சகோதரிகள் குடும்பங்களின் சார்பிலும் இறைவனைப் பிரார்த்திக்கிறோம். அவரின் ஆத்மா சாந்தியடையட்டும்.

*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*

**பெறாமகள்**
**திருமதி ரஞ்சனி பத்மநாதன்**
**ஜேர்மனி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிநூல்கள் சில...

## கொன்றை வேந்தன்

கடவுள் வாழ்த்து

கொன்றை வேந்தன் செல்வ னடியினை
என்று மேத்தித் தொழுவோம் யாமே.

நூல்

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் 1
ஆலயந் தொழுவது சாலவும் நன்று 2
இல்லற மல்லது நல்லற மன்று 3
ஈயார் தேட்டை தீயார் கொள்வர் 4
உண்டி சுருங்குதல் பெண்டிர்க் கழகு 5
ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும் 6
எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும் 7
ஏவாமக்கள் மூவா மருந்து 8
ஐயம் புகினும் செய்வன செய் 9
ஒருவனைப் பற்றி ஓரகத்து இரு 10
ஓதலின் நன்றே வேதியர்க்கு ஒழுக்கம் 11
ஔவியம் பேசுதல் ஆக்கத்திற்கு அழிவு 12
அஃகமும் காசும் சிக்கெனத் தேடு 13
கற்பு எனப்படுவது சொல் திறம்பாமை 14
காவல் தானே பாவையர்க்கு அழகு 15
கிட்டாதாயின் வெட்டென மற 16
கீழோர் ஆயினும் தாழ உரை 17
குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை 18
கூர் அம்பு ஆயினும் வீரியம் பேசேல் 19



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| கெடுவது செய்யின் விடுவது கருமம் | 20 |
| கேட்டில் உறுதி கூட்டும் உடைமை | 21 |
| கைப்பொருள் தன்னில் மெய்ப்பொருள் கல்வி | 22 |
| கொற்றவன் அறிதல் உற்ற இடத்து உதவி | 23 |
| கோள்செவிக் குறளை காற்றுடன் நெருப்பு | 24 |
| கௌவை சொல்லின் எவ்வருக்கும் பகை | 25 |
| சந்ததிக்கு அழகு வந்தி செய்யாமை | 26 |
| சான்றோர் என்கை ஈன்றோர்க்கு அழகு | 27 |
| சிவத்தைப் பேணில் தவத்திற்கு அழகு | 28 |
| சீரைத் தேடின் ஏரைத் தேடு | 29 |
| சுற்றத்திற்கு அழகு சூழ இருத்தல் | 30 |
| சூதும் வாதும் வேதனை செய்யும் | 31 |
| செய்தவம் மறந்தால் கைதவம் ஆளும் | 32 |
| சேமம் புகினும் யாமத்து உறங்கு | 33 |
| சை யொத்திருந்தால் ஐயம் இட்டு உண் | 34 |
| சொக்கர் என்பவர் அத்தம் பெறுவர் | 35 |
| சோம்பர் என்பர் தேம்பித் திரிவர் | 36 |
| தந்தை சொல்மிக்க மந்திரம் இலலை | 37 |
| தாயிற் சிறந்த ஒரு கோயிலும் இல்லை | 38 |
| திரை கடல் ஓடியும் திரவியம் தேடு | 39 |
| தீராக் கோபம் போராய் முடியும். | 40 |
| துடியாப் பெண்டிர் மடியில் நெருப்பு | 41 |
| தூற்றும் பெண்டிர் கூற்று எனத் தகும். | 42 |
| தெய்வம் சீறின் கைதவம் மாளும் | 43 |
| தேடாது அழிக்கின் பாடா முடியும் | 44 |
| தையும் மாசியும் வையகத்து உறங்கு | 45 |
| தொழுது ஊண் சுவையின் உழுது ஊண் இனிது | 46 |
| தோழனோடும் ஏழைமை பேசேல் | 47 |
| நல் இணக்கம் அல்லது அல்லல் படுத்தும் | 48 |
| நாடு எங்கும் வாழக் கேடு ஒன்றும் இல்லை | 49 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| நிற்கக் கற்றல் சொல் திறம்பாமை | 50 |
| நீரகம் பொருந்திய ஊரகத்திரு | 51 |
| நுண்ணிய கருமமும் எண்ணித் துணி | 52 |
| நூன் முறை தெரிந்து சீலத்து ஒழுகு | 53 |
| நெஞ்சை ஒளித்து ஒரு வஞ்சகம் இல்லை | 54 |
| நேரா நோன்பு சீர் ஆகாது | 55 |
| நைபவர் எனினும் நொய்ய உரையேல் | 56 |
| நொய்யவர் என்பவர் வெய்யவர் ஆவர் | 57 |
| நோன்பு என்பதுவே கொன்று தின்னாமை | 58 |
| பண்ணிய பயிரில் புண்ணியம் தெரியும் | 59 |
| பாலோடு ஆயினும் காலம் அறிந்து உண் | 60 |
| பிறண்மனை புகாமை அறம் எனத்தகும் | 61 |
| பீரம் பேணி பாரந் தாங்கும் | 62 |
| புலையும் கொலையும் களவும் தவிர் | 63 |
| பூரியோர்க்கு இல்லை சீரிய ஒழுக்கம் | 64 |
| பெற்றோர்க்கு இல்லை சுற்றமும் சினமும் | 65 |
| பேதைமை என்பது மாதர்க்கு அணிகலம் | 66 |
| பையச் சென்றால் வையந் தாங்கும் | 67 |
| பொல்லாங்கு என்பவை எல்லாம் தவிர் | 68 |
| போனகம் என்பது தான் உழந்து உண்டல் | 69 |
| மருந்து ஆயினும் விருந்தோடு உண் | 70 |
| மாரி அல்லது காரியம் இல்லை | 71 |
| மின்னுக்கு எல்லாம் பின்னுக்குமழை | 72 |
| மீகாமன் இல்லாத மரக்கலம் ஓடாது | 73 |
| முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் | 74 |
| மூத்தோர் சொன்ன வார்த்தை அமிர்தம் | |
| மெத்தையில் படுத்தல் நித்திரைக்கு அழகு | 76 |
| மேழிச் செல்வங் கோழை படாது | 77 |
| மைவிழியார் தம் மனை அகன்று ஒழுகு | 78 |
| மொழிவது மறுக்கின் அழிவது கருமம் | 79 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| மோனம் என்பது ஞான வரம்பு | 80 |
| வளவன் ஆயினும் அளவறிந்து அளித்துண் | 81 |
| வானஞ் சுருங்கின் தானம் சுருங்கும் | 82 |
| விருந்தில்லோர்க் கில்லை பொருந்திய ஒழுக்கம் | 83 |
| வீரன் கேண்மை கூர் அம்பாகும். | 84 |
| உரவோர்என்கை இரவாது இருத்தல் | 85 |
| ஊக்கம் உடைமை ஆக்கத்திற்கு அழகு | 86 |
| வெள்ளைக்கு இல்லை கள்ளச் சிந்தை | 87 |
| வேந்தன் சீரின் ஆம் துணை இல்லை | 88 |
| வையந் தோறுந் தெய்வந் தொழு | 89 |
| ஒத்த இடத்து நித்திரை கொள் | 90 |
| ஓதாதவர்க்கு இல்லை உணர்வோடு ஒழுக்கம் | 91 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்குண்டாம்

## (மூதுரை)

### காப்பு
### வெண்பா

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது - பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கை யான்பாதம்
தப்பாம சார்வார் தமக்கு.

நன்றி யொருவற்குச் செய்தக்கால் அந்நன்றி
என்று தருங்கொல் எனவேண்டா - நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான்றருதலால். 1

நல்லார் ஒருவர்க்குச்செய்த உபகாரங்
கல்மேல் எழுத்துப்போற் காணுமே - அல்லாத
ஈரமிலா நெஞ்சத்தார்க்கீந்த உபகாரம்
நீர் மேல் எழுத்திற்கு நேர். 2

இன்னா விளமை வறுமைவந் தெய்தியக்கால்
இன்னா அளவில் இனியவும் - இன்னாத
நாளல்லா நாட்பூத்த நன்மலரும் போலுமே
ஆளில்லா மங்கைக் கழகு. 3

அட்டாலும் பால்சுவையிற் குன்றாதளவளாய்
நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர்
கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே சங்கு
சுட்டாலும் வெண்மை தரும். 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து முன்றாலும் ஆகுநா ளன்றி
எடுத்த கருமங்கள் ஆகா - கொடுத்த
உருவத்தால் நீண்ட உயர்மரங்கள் எல்லாம்
பருவத்தால் அன்றிப் பழா. 5

உற்ற விடத்தில் உயிர்வழங்குந் தன்மையோர்
பற்றலரைக் கண்டாற் பணிவரோ? - கற்றூண்
பிளந்திறுவதல்லாற் பெரும்பாரந் தாங்கின்
தளர்ந்து வளையுமோ தான். 6

நீரளவே யாகுமாம் நீராம்பல் தான்கற்ற
நூலளவே யாகுமாம் நுண்ணறிவு - மேலைத்
தவத்தளவே யாகுமாந் தான்பெற்ற செல்வம்
குலத்தளவே ஆகும் குணம். 7

நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக் க
நல்லார்சொற் கேட்பதுவும் நன்றே - நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே யவரோ
டிணங்கி யிருப்பதுவும் நன்று. 8

தீயாரைக் காண்பதுவும் தீதே திருவற்ற
தீயார்சொற் கேட்பதுவுந் தீதே - தீயார்
குணங்கள் உரைப்பதுவுந் தீதே அவரோ
டிணங்கி யிருப்பதுவுந் தீது. 9

நெல்லுக்கிறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கு மாங்கே பொசியுமாம் - தொல்லுலகில்
நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்
டெல்லார்க்கும் பெய்யும் மழை. 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டு முளைப்ப தரிசியே யானாலும்
விண்டுமி போனால் முளையாதாங் - கொண்டபேர்
ஆற்ற லுடையார்க்கும் ஆகா தளவின்றி
ஏற்ற கருமஞ்செயல். 11

மடல் பெரிது தாழை மகிழினிது கந்தம்
உடல்சிறியர் என்றிருக்க வேண்டா - கடல்பெரிது
மண்ணீரு மாகா ததனருகே சிற்றூறல்
உண்ணீரும் ஆகி விடும். 12

கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள் - சபைநடுவே
நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
மாட்டா தவன் நல்மரம். 13

கானமயிலாட கண்டிருந்த வான்கோழி
தானு மதுவாகப் பாவித்துத் - தானுந்தன்
பொல்லாச் சிறகைவிரித் தாடினாற் போலுமே
கல்லாதான் கற்ற கவி. 14

வேங்கை வரிப்புலிநோய் தீர்த்த விடகாரி
ஆங்கதனுக் காகாரம் ஆனாற்போற் - பாங்கறியாப்
புல்லறி வாளர்க்குச் செய்தவுபகாரம்
கல்லின்மேல் இட்ட கலம். 15

அடக்க முடையார் அறிவிலரென் றெண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா - மடைத்தலையில்
ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும்
வாடி யிருக்குமாங் கொக்கு. 16



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வார் உறவல்லார் - அக்குளத்திற்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி உறுவார் உறவு. 17

சீரியர் கெட்டாலுஞ் சீரியரே சீரியர்மற்
றல்லாதார் கெட்டாலங் கென்னாகும் - சீரிய
பொன்னின் குடமுடைந்தாற் பொன்னாகும் என்னாகும்
மண்ணின் குடமுடைந்தக் கால். 18

ஆழ வமுக்கி முகக்கினும் ஆழ்கடனீர்
நாழி முகவாது நானாழி - தோழி
நிதியுங் கணவனும் நேர்படினுந் தத்தம்
விதியின் பயனே பயன். 19

உடன் பிறந்தார் சுற்றத்தார் என்றிருக்கவேண்டா
உடன்பிறந்தே கொல்லும் வியாதி - உடன்பிறவா
மாமலையி லுள்ள மருந்தே பிணிதீர்க்கும்
அம்மருந்து போல்வாரு முண்டு. 20

இல்லாள் அகத்திருக்க இல்லாத தொன்றில்லை
இல்லாளும் இல்லாளே யாமாயின் - இல்லாள்
வலிகிடந்த மாற்றம் உரைக்குமேல் அவ்வில்
புலிகிடந்த தூறாய் விடும். 21

எழுதியவா றேகாண் இரங்கு மடநெஞ்சே
கருதியவா றாமோ கருமம் - கருதிப்போய்க்
கற்பகத்தைச் சேர்ந்தோர்க்குக் காஞ்சிரங்கா யீத்த தேல்
முற்பவத்திற் செய்த வினை. 22



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பிளவோ டொப்பர் கயவர் கடுஞ்சினத்துப்
பொற்பிளவோ டொப்பாரும் போல்வாரே - விற்பிடித்து
நீர்கிழிய எய்த வடுப்போல மாறுமே
சீரொழுகு சான்றோர் சினம். 23

நற்றா மரைக்கயத்தில் நல்லன்னஞ் சேர்ந்ததாற் போல்
கற்றாரைக் கற்றாரே காமுறுவர் - கற்பிலா
மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் முதுகாட்டிற்
காக்கை யுவக்கும் பிணம். 24

நஞ்சுடைமை தானறிந்து நாகங் கரந்துறையும்
அஞ்சாப் புறங்கிடக்கும் நீர்ப்பாம்பு - நெஞ்சிற்
கரவுடையார் தம்மைக் கரப்பர் கரவார்
கரவிலா நெஞ்சத் தவர். 25

மன்னனும் மாசறக் கற்றோனுஞ் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன் - மன்னற்குத்
தன்தேசம் அல்லாற் சிறப்பில்லைக் கற்றோற்குச்
சென்றவிடம் எல்லாஞ் சிறப்பு. 26

கல்லாத மாந்தர்க்குக் கற்றுணர்ந்தார் சொற்கூற்றம்
அல்லாத மாந்தர்க் கறம்கூற்றம் - மெல்லிய
வாழைக்குத் தான் ஈன்ற காய்கூற்றங் கூற்றமே
இல்லிற் கிசைந்தொழுகாப் பெண். 27

சந்தன மென்குறடு தான்தேய்ந்த காலத்துங்
கந்தங் குறைபடா தாதலால் - தந்தந்
தனஞ்சிறியர் ஆயினும் தார்வேந்தர் கேட்டான்
மனஞ்சிறியர் ஆவரோ மற்று. 28



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருவினிய சுற்றமும் வான்பொருளும் நல்ல
உருவும் உயர்குலமும் எல்லாம் - திருமடந்தை
ஆம்போ தவளோடும் ஆகும் அவள்பிரிந்து
போம்போ தவளோடும் போம். 29

சாந்தனையுந் தீயனவே செய்திடினுந் தாமவரை
ஆந்தனையுங் காப்பர் அறிவுடையோர் - மாந்தர்
குறைக்குந் தனையுங் குளிர்நிழலைத் தந்து
மறைக்குமாம் கண்டீர் மரம். 30



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்வழி

## கடவுள் வாழ்த்து

பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் இவை
நாலும் கலந்து உனக்கு நான் தருவேன் - கோலம்செய்
துங்கக் கரி முகத்துதுத் தூமணியே நீ எனக்குச்
சங்கத் தமிழ் மூன்றும் தா.

### நூல்

புண்ணியம் ஆம் பாவம் போம் போன நாள்செய்த அவை மண்ணில்
பிறந்தார்க்கு வைத்த பொருள் - எண்ணும் கால்
ஈது ஒழிய வேறு இல்லை; எச்சமயத்தோர் சொல்லும்
தீது ஒழிய நன்மை செயல். 1

சாதி இரண்டு ஒழிய வேறு இல்லை: சாற்றும் கால்
நீதி வழுவா நெறி முறையின் - மேதினியில்
இட்டார் பெரியோர், இடாதார் இழி குலத்தோர்
பட்டாங்கில் உள்ள படி. 2

இடும்பைக்கு இடும்பை இயல்பு உடம்பு இது அன்றே
இடும் பொய்யை மெய் என்று இராதே - இடுங் கடுக
உண்டாயின் உண்டாகும் ஊழில் பெரு வலி நோய்
விண்டாரைக் கொண்டாடும் வீடு. 3

எண்ணிஒரு கருமம் யார்க்கும் செய்ய ஒண்ணாது
புண்ணியம் வந்து எய்த போது அல்லால் - கண் இல்லான்
மாங்காய் விழ எறிந்த மாத்திரைக் கோல் ஒக்குமே
ஆங்காலம் ஆகும் அவர்க்கு. 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருந்தி அழைத்தாலும் வாராத வாரா
பொருந்துவன போமின் என்றால் போகா - இருந்து ஏங்கி
நெஞ்சம் புண்ணாக நெடுந்தூரம் தாம் நினைந்து
துஞ்சுவதே மாந்தர் தொழில். 5

உள்ளது ஒழிய ஒருவர்க்கு ஒருவர் சுகம்
கொள்ளக் கிடையா குவலயத்தில் - வெள்ளக்
கடல் ஓடி மீண்டு கரையேறினால் என்
உடலோடு வாழும் உயிர்க்கு. 6

எல்லாப் படியாலும் எண்ணினால் இவ் வுடம்பு
பொல்லாப் புழுமலி நோய்ப் புன்குரம்பை - நல்லார்
அறிந்திருப்பார் ஆதலினால் ஆங் கமல நீர் போல்
பிரிந்திருப்பர் பேசார் பிறர்க்கு. 7

ஈட்டும் பொருள் முயற்சி எண்ணிறந்த ஆயினும் ஊழ்
கூட்டும்படி அன்றிக் கூடாவாம் - தேட்டம்
மரியாதை காணும் மகிதலத்தீர் கேண்மின்
தரியாது காணும் தனம். 8

ஆற்றுப் பெருக்கு அற்று அடிசுடும் அந்நாளும் அவ்ஆறு
ஊற்றுப் பெருக்காம் உலகு ஊட்டும் - ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தார் ஆனாலும்
இல்லை என மாட்டார் இசைந்து. 9

ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவாரோ? மா நிலத்தீர் - வேண்டாம்
நமக்கும் அது வழியே நாம் போம் அளவும்
எமக்குஎன் என்று இட்டு உண்டு இரும். 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நாள் உணவை ஒழி என்றால் ஒழியாய்
இரு நாளுக்கு ஏல் என்றால் ஏலாய் - ஒரு நாளும்
என் நோவு அறியாய் இடும்பை கூர் என் வயிறே!
உன்னோடு வாழ்தல் அரிது. 11

ஆற்றங் கரையின் மரமும் அரசு அறிய
வீற்றிருந்த வாழ்வும் விழும் அன்றே - ஏற்றம்
உழுது உண்டு வாழ்வதற்கு ஒப்பு இல்லை கண்டீர்
பழுது உண்டு வேறு ஓர் பணிக்கு. 12

ஆவாரை யாரே அழிப்பார்? அது அன்றிச்
சாவாரை யாரே தவிர்ப்பவர்? ஓவாமல்
ஐயம் புகுவாரை யாரே விலக்குவார்?
மெய் அம்புவி அதன் மேல். 13

பிச்சைக்கு மூத்தகுடி வாழ்க்கை பேசுங்கால்
இச்சை பல சொல்லி இடித்து உண்கை - சீச்சீ
வயிறு வளர்க்கைக்கு மானம் அழியாது
உயிர் விடுகை சால உறும். 14

சிவாய நம என்று சிந்தித்து இருப்போர்க்கு
அபாயம் ஒரு நாளும் இல்லை - உபாயம்
இதுவே மதியாகும் அல்லாத எல்லாம்
விதியே மதியாய் விடும். 15

தண்ணீர் நில நலத்தால் தக்கோர் குணம் கொடையால்
கண் நீர்மை மாறாக் கருணையால் - பெண்ணீர்மை
கற்பு அழியா ஆற்றால்! கடல் சூழ்ந்த வையகத்துள்
அற்புதமாம் என்றே அறி. 16



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய் தீவினை இருக்கத் தெய்வத்தை நொந்தக்கால்
எய்த வருமோ இரு நிதியம்? - வையத்து
அறும் பாவம் என்ன அறிந்துஅன்று இடார்க்கு இன்று
வெறும் பானை பொங்குமோ மேல்! 17

பெற்றார் பிறந்தார் பெரு நாட்டார் பேருலகின்
உற்றார் உகந்தார் என வேண்டா - மற்றோர்
இரணங் கொடுத்தால் இடுவர்; இடாரே
சரணம் கொடுத்தாலும் தாம். 18

சேவித்தும் சென்று இரந்தும் தெண் நீர்க்கடல் கடந்தும்
பாவித்தும் பாராண்டும் பாட்டு இசைத்தும் போவிப்பம்
பாழின் உடம்பை வயிற்றின் கொடுமையால்
நாழி அரிசிக்கே நாம். 19

அம்மி துணையாக ஆறு இழிந்தவாறு ஒக்கும்
கொம்மை முலை பகர்வார் கொண்டாட்டம் - இம்மை
மறுமைக்கும் நன்று அன்று மாநிதியம் போக்கி
வெறுமைக்கு வித்தாய் விடும். 20

நீரும் நிழலும் நிலம் பொதியும் நெல் கட்டும்
பேரும் புகழும் பெரு வாழ்வும் - ஊரும்
வருந்திருவும் வாழ் நாளும் வஞ்சமில்லாதார்க்கு என்றும்
தரும் சிவந்த தாமரையாள் தான். 21

பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்து வைத்துக்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள்; கூடுவிட்டு இங்கு
ஆவிதான் போன பின்பு ஆரே அனுபவிப்பார்
பாவிகாள் அந்தப் பணம். 22



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதாளம் சேருமே வெள் எருக்குப் பூக்குமே
பாதாள மூலி படருமே - மூதேவி
சென்றிருந்து வாழ்வளே சேடன் குடிபுகுமே
மன்று ஓரம் சொன்னார் மனை. 23

நீறு இல்லா நெற்றி பாழ்; நெய் இல்லா உண்டிபாழ்
ஆறு இல்லா ஊருக்கு அழகு பாழ் -மாறுஇல்
உடன் பிறப்பு இல்லா உடம்புபாழ்; பாழே
மடக் கொடி இல்லா மனை. 24

ஆன முதலில் அதிகம் செலவு ஆனான்
மானம் அழிந்து மதி கெட்டுப் - போன திசை
எல்லார்க்கும் கள்ளனாய் ஏழ் பிறப்புமதீயனாய்
நல்லார்க்கும் பொல்லனாம் நாடு. 25

மானம் குலம் கல்வி வண்மை அறிவுடைமை
தானம் தவம் உயர்ச்சி தாளாண்மை - தேனின்
கசி வந்த சொல்லியர் மேல் காமுறுதல் பத்தும்
பசி வந்திடப் பறந்து போம். 26

ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட்டு ஒன்றாகும்
அன்றி அதுவரினும் வந்து எய்தும் - ஒன்றை
நினையாத முன் வந்து நிற்பினும் நிற்கும்
எனை ஆளும் ஈசன் செயல். 27

உண்பது நாழி உடுப்பது நான்கு முழம்
எண்பது கோடி நினைந்து எண்ணுவன - கண் புதைந்த
மாந்தர் குடி வாழ்க்கை மண்ணின் கலம் போலச்
சாந்துணையும் சஞ்சலமே தான். 28



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரம் பழுத்தால் வௌவாலை வாவென்று கூவி
இரந்து அழைப்பார் யாவரும் அங்கில்லை - சுரந்து அமுதம்
கற்றா தரல் போல் கரவாது அளிப்பரேல்
உற்றார் உலகத் தவர். 29

தாம் தாம் முன் செய்தவினை தாமே அனுபவிப்பார்
பூந்தாமரை யோன் பொறி வழியே - வேந்தே
ஒறுத்தாரை என் செயலாம் ஊரெல்லாம் ஒன்றா
வெறுத்தாலும் போமோ விதி. 30

இழுக்கு உடைய பாட்டிற்கு இசை நன்று; சாலும்
ஒழுக்கம் உயர் குலத்தின் நன்று - வழுக்குடைய
வீரத்தின் நன்று விடாநோய்; பழிக்கு அஞ்சாத்
தாரத்தின் நன்று தனி. 31

ஆறிடும் மேடும் மடுவும் போலாம் செல்வம்
மாறிடும் ஏறிடும் மாநிலத்தீர் - சோறு இடும்
தண்ணீரும் வாரும்; தருமமே சார்பாக
உண்ணீர்மை வீறும் உயர்ந்து. 32

வெட்டனவை மெத்தனவை வெல்லாவாம்; வேழத்தில்
பட்டு உருவும் கோல பஞ்சில் பாயாது - நெட்டிருப்புப்
பாரைக்கு நெக்கு விடாப்பாறை பசுமரத்தின்
வேருக்கு நெக்கு விடும். 33

கல்லானே ஆனாலும் கைப்பொருள் ஒன்று உண்டாயின்
எல்லோரும் சென்று அங்கு எதிர்கொள்வர் - இல்லானை
இல்லாளும் வேண்டாள் மற்று ஈன்று எடுத்த தாய் வேண்டாள்
செல்லாது அவன் வாயிற் சொல். 34



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூவாதே காய்க்கும் மரமும் உளமக்களுளும்
ஏவாதே நின்று உணர்வார் தாம் உளரே - தூவா
விரைத்தாலும் நன்று ஆகா வித்தெனவே பேதைக்கு
உரைத்தாலும் தோன்றா உணர்வு. 35

நண்டு சிப்பி வேய் கதலி நாசமுறும் காலத்தில்
கொண்ட கரு அளிக்கும் கொள்கைபோல் - ஒண்தொடி
போதம் தனம் கல்வி பொன்ற வரும் காலம் அயன்
மாதர் மேல் வைப்பார் மனம். 36

வினைப் பயனை வெல்வதற்கு வேதம் முதலாம்
அனைத்தாய நூலகத்தும் இல்லை - நினைப்பது எனக்
கண்ணுறுவது அல்லால் கவலைப் படேல் நெஞ்சேமெய்
விண் உறுவார்க்கு இல்லை விதி. 37

நன்று என்றும் தீது என்றும் நான் என்றும் தான் என்றும்
அன்று என்றும் ஆம் என்றும் ஆகாதே - நின்ற நில
தானதாம் தத்துவமாம் சம்பறுத்தார் யாக்கைக்குப்
போனவா தேடும் பொருள். 38

முப்பதாம் ஆண்டு அளவில் மூன்றற்று ஒரு பொருளை
தப்பாமல் தன்னுள் பெறான் ஆயின் - செப்பும்
கலை அளவே ஆகுமாம் காரிகையார் தங்கள்
முலை அளவே ஆகுமாம் மூப்பு. 39

தேவர் குறளும் திருநான் மறை முடிவும்
மூவர் தமிழும் முனி மொழியும் - கோவை
திருவாசகமும் திருமூலர் சொல்லும்
ஒரு வாசகம் என்று உணர். 40



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி

செல்லத்துரை + சின்னாச்சிப்பிள்ளை
- கந்தசாமி

சுவாமிநாதர் + பொன்னம்மா
- இராஜேஸ்வரி (அமரர்)
- புவனேஸ்வரி (அமரர்)
- முத்துலிங்கம்

கந்தசாமி + புவனேஸ்வரி


| கௌரிமலர் (சுவிஸ்) | இராஜமனோகரன் | மதனமோகன் (ஜேர்மனி) | மனோகரி | ஜீத்தா (சுவிஸ்) | புஸ்பா |
|---|---|---|---|---|---|
| + | + | + | + | + | + |
| நித்தியானந்தன் | கமலாசனி | பத்மரஞ்சனி | ஸ்ரீரஞ்சன் | லோகேந்திரன் | சதீஸ்குமார் |
| செந்தூரன் | பிரணவி | ஜனகன் | பதஞ்சலிமீனாம்பாள் | பிரித்திகா | திலக்ஷனா |
| சிந்துஜன் | சுகசிந்தவி | மதுவந்தி | பவணந்திமீனாம்பாள் | சாத்விகன் | மதுசன் |
| | | | பிரம்மாத்மன் | லம்போதரன் | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது உளங்கனிந்த
# நன்றிகள் நவில்கின்றோம்

எமது குடும்பத்தின் தலைவனாக
கோபுரமாக வாழ்ந்து, காத்த
அமரர் செல்லத்துரை கந்தசாமி
அவர்களின்
இறுதிச் சடங்கில்
கலந்து கொண்டு, நம் துயரங்களில்
பங்கு கொண்டு உதவியவர்களுக்கும்
மலர் வளையங்கள், மாலைகள் சாத்தி
அஞ்சலிகள் செலுத்தியோருக்கும்
தொலைபேசி அழைப்பின் மூலம்
இரங்கற் செய்திகள் கூறியோருக்கும்
அந்தியேட்டி சபிண்டீகரணம்
முதலான ஆத்மா சாந்திக் கிரியைகளில்
பங்குகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள்,
அயலவர்கள் ஆகியோருக்கும்
மற்றும் சகல வழிகளிலும் உதவிபுரிந்த
அனைத்து உள்ளங்களுக்கும் நாம் எம் சிரம் தாழ்த்தி
இருகரம் கூப்பி உளங்கனிந்த நன்றிகளைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.



காங்கேசன்துறை வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

**குடும்பத்தினர்**

சாயி பிறிண்டேர்ஸ் - கே.கே.எஸ் றோட், கோண்டாவில். T.P- 077 2209474.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சாமி பிறிண்டேர்ஸ் - கே.கே.எஸ் வீதி, கொண்டாவில். T.P: 077 2209474.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org